Registered as a News Paper · மக்கங்கள் 06 · விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM · Peoples Daily · மக்கள் தினசரி

நாதம் 08 · திருவள்ளுவர் ஆண்டு 2024 · தை 06 · (19-01-1993) · செவ்வாய்க்கிழமை · ஓசை 836

## திருவில் திடலில் நாளை நினைவுக்கல் நாட்டல்

சர்வதேசக் கடற்பரப்பில் இந்திய அரசின் கபடத்தனமான துரோகத்தின் விளைவால் நீலக்கடலை செந்நிறமாக்கி உயிரற்ற உடலைக்கூட இந்தியா தீண்ட முடியாதவாறு தம்மை அழித்து தமிழரின் தன்மானத்தை, வீரத்தை உலகிற்கு பறை சாற்றி இந்தியாவின் வேசத்தை வெளிக்கொணர்ந்த எம் மூத்த தளபதியும், மத்திய குழு உறுப்பினருமான கேணல் கிட்டுவுடன் ஒன்பது வீரவேங்கைகளின் வீரச்சாவை அஞ்சலிப்பதற்கும், இந்தியாவின் இழிசெயலை கண்டிப்பதற்குமான இறுதி ஊர்வலமும் அதனைத் தொடர்ந்து பொதுக் கூட்டமும் நாளை நடைபெறவுள்ளது. பத்து வீரவேங்கைகளினதும் (8ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழப் பகுதி எங்கும் சோகக் காட்சி

# மக்கள் உணர்வுபூர்வமாக அஞ்சலி

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியான கேணல் கிட்டு உட்பட 10 போராளிகள் வீரச்சவடைந்தமையை தொடர்ந்து தமிழீழம் எங்கும் சோகமயமாகக் காட்சியளிக்கின்றது. திரு கிட்டு மரணமடைந்ததைத் தொடர்ந்து வீதிகள் தோறும் கறுப்புக்கொடிகள், தோரணங்கள் என்பன கட்டப்பட்டுள்ளதோடு அவர்களின் உருவப்படங்களுக்கு உணர்வு பூர்வமான அஞ்சலியும் மக்கள் செய்து வருகின்றனர்.


இந்திய அரசின்நயவஞ்சகசதிச் செயலுக்குப் பலியாகிய விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி திரு. கிட்டு உட்பட பத்து விடுதலைப் புலிப் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக தமிழீழமெங்கும் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இந்திய அரசின் காட்டுமிராண்டித்தனமான செயலுக்கு பத்துப் போராளிகளும் பலியாகிய செய்தி வெளியாகியது முதல் தமிழீழம் சோகத்தில் மூழ்கிக் கிடக்கிறது. குறிப்பாக வட தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சோகத்தின் சுவடுகளை அவதானிக்க முடிகிறது. அனைத்து மக்களின் முகங்களிலும் சோகம் நிரம்பி வழிந்துகொண்டிக்கிறது சிறுவர்கள் முதல் வயோதிபர்கள் வரை அனைத்து தரப்பு மக்களது உள்ளங்களும், உதடுகளும் தளபதி கிட்டு பற்றிய நினைவுகளுடனேயே துடித்துக் கொண்டிருக்கின்றன.

குடாநாட்டில் எங்குபார்த்தாலும் சோகத்தின் சின்னங்கள். அஞ்சலி செலுத்தும் அம்சங்கள் தளபதியின் புகழ் பாடும் ஒலி அலைகள். இவ்வாறு குடாநாடு முழுவதும் சோகத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

குடாநாட்டின் வடமராட்சி தென்மராட்சி, வலிகாமம் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் உள்ள வீதிகள் எங்கும் மாவிலைகளின்றிதோரணங்கள் அசைந்து ஆடிக்கொண்டிருந்தன. இடையிடையே கறுப்புக் கொடிகள் காற்றில் அசைந்துகொடிருந்தன. அத்துடன் ஒவ்வொரு வீட்டு வாயில்களிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. வீதிகளில் மக்களின் நடமாட்டமும் வாகனப் போக்குவரத்தும் குறைவாகக் காணப்பட்டது. வீதியால் சென்ற ஒருசில வாகனங்களும் கறுப்புக்கொடிகளுடன் சென்றன. வீதியால் செல்லும் மக்கள் கறுப்புப்பட்டி அணிந்தபடி சென்றனர்.

சனசமூக நிலையங்கள், பொதுஸ்தபனங்கள், பொது மக்கள் கூடும் இடங்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)



## இந்திய வல்லாதிக்கத்திற்கு வன்னி மக்கள் கண்டனம்

[கிளிநொச்சி]

இந்திய வல்லாதிக்கத்தின் நயவஞ்சகத்திற்கு பலியாகிய தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கிட்டுவினதும் ஏனைய ஒன்பது வேங்கைகளினதும் வீரச்சாவை அடுத்து வன்னிப்பகுதி பெரும் துயர

தினரும் அப்பகுதி மக்களும் முடிவு செய்துள்ளனர். இறுதி தினமான நாளை கண்டன நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்திய பிரதமர் நரசிம்மராவினதும், தமிழ் நடு முதலமைச்சர் ஜெயலலிதாவினதும் கொடும்பாவிகளும் இந்தன

நொச்சி வின்சன் றோட் சந்தியில் நிறுத்திவைக்கபட்டுள்ளன இவை நாளை இழுத்துச் செல்லப்பட்டு அரச அதிபர் அலுவலகம் முன்பாக தீயிடப்படவுள்ளது

இதேவேளை நேற்று ஓம

## புல்மோட்டையில் புலிகள் அதிரடி

## அதிகாரி உட்பட 14 படை பலி

டிக்கப்பட்டு வருகிறது. இந்திய அரசின் காட்டுமிராண்டித்தனமான செயலுக்கு பத்துப் போராளிகளும் பலியாகிய செய்தி வெளியாகியது வளிந்துகொண்டிக்கிறது சிறுவர்கள் முதல் வயோதிபர்கள் வரை அனைத்து தரப்பு மக்களது உள்ளங்களும், உதடுகளும் தளபதி கிட்டு பற்றிய சோகத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

குடாநாட்டின் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய அனைத்துப் பகுதிகளி

கொடிகள் கட்டப்பட்டிருந்தன. வீதிகளில் மக்களின் நடமாட்டமும் வாகனப் போக்குவரத்தும் குறைவாகக் காணப்பட்டது. வீதியால் சென்ற ஒருசில வாகனங்களும் கறுப்புக்கொடிகளுடன் சென்றன. வீதியால் செல்லும் மக்கள் கறுப்புப்பட்டி அணிந்தபடி சென்றனர்

சனசமூக நிலையங்கள், பொதுஸ்தாபனங்கள், பொதுமக்கள் கூடும் இடங்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)



# இந்திய வல்லாதிக்கத்திற்கு வன்னி மக்கள் கண்டனம்

[கிளிநொச்சி]

இந்திய வல்லாதிக்கத்தின் நயவஞ்சகத்திற்கு பலியாகிய தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கிட்டுவினதும் ஏனைய ஒன்பது வேங்கைகளினதும் வீரச்சாவை அடுத்து வன்னிப்பகுதி பெரும் துயரமடைந்துள்ளது.

இதனையடுத்து வன்னிப் பகுதி முழுவதும் மூன்று தினங்கள் துக்கதினம் அனுஷ்டிக்க வன்னி வெகுஜன இயக்கத்தினரும் அப்பகுதி மக்களும் முடிவு செய்துள்ளனர். இறுதி தினமான நாளை கண்டன நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்திய பிரதமர் நரசிம்மராவினதும், தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவினதும் கொடும்பாவிகளும் சிங்கள பேரினவாதத்தைச் சித்திரிக்கும் பூதமும், இந்திய வல்லாதிக்கத்தின் நச்சுத் தன்மையை சித்திரிக்க பாம்பு வடிவமும் மக்கள் பார்வைக்கு கிளிநொச்சி வின்சன் றோட் சந்தியில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன இவை நாளை இழுத்துச் செல்லப்பட்டு அரச அதிபர் அலுவலகம் முன்பாக தீயிடப்படவுள்ளது

இதேவேளை நேற்று ஓமந்தை, இரணை இலுப்பைக்குளம், பூவரசங்குளம் உட்பட பல்வேறு பகுதிகளிலும் அஞ்சலிக் கூட்டங்கள் இடம்பெற்றன. இவற்றில் நூற்றுக்கணக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியபிரதமர்கொடும்பாவி வட பகுதியெங்கும் எரிப்பு

(யாழ்ப்பாணம்)

நயவஞ்சக இந்தியத் தலைவர்களது கொடும்பாவிகள் பல இன்றும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் எரிக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

யாழ். சிற்றூர்திச் சங்கம் பெரியளவிலான கொடும்பாவி ஊர்வலமொன்றை இன்று ஏற்பாடு செய்துள்ளது.

மாதகல், ஆனைக்கோட்டை, கொக்குவில், மூளாய், பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய், ஊரெழு, தெல்லிப்பழை, அச்சுவேலி, மூளாய், சாவகச்சேரி, நெல்லியடி ஆகிய பகுதிகளில் இருந்து கொடும்பாவி ஊர்வலங்கள் இன்று ஆரம்பமாகவுள்ளன. இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோரது கொடும்பாவிகள் இந்த ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்படவுள்ளது.

இன்று காலை மேற்படி பகுதிகளில் இருந்து ஆரம்பமாகும். இந்த ஊர்வலங்கள் மாலை 4 00 மணியளவில் யாழ். நகரை வந்தடையும். இக்கொடும்பாவி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை நேற்று யாழ். குடாநாட்டில் பல பகுதிகளிலும் நயவஞ்சக சதிகார இந்தியத் தலைவர்களது கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்றலிலும், யாழ். நகரத்திலும் வைத்து இக்கொடும்பாவிகள் எரிக்கப்பட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கிட்டுவின் வீரமரண நிகழ்வு: தமிழ் நாட்டில் இருட்டடிப்பு

## தருப்புக்காவலில் தமிழக தலைவர்கள்

(சென்னை)

தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து விடுதலைப் புலிகள் இந்திய மத்திய அரசாங்கத்தின் நயவஞ்சகத்திற்குப் பலியாகிய நிகழ்வு தமிழ்நாட்டு பத்திரிகைகளில் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிகழ்வு குறித்த செய்திகள் தமிழ்நாட்டு பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கப்படவில்லை எனவும் இது மத்திய, மாநில அரசுகளின் திட்டமிட்ட செயல் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளை சதியால் மரணமடையச் செய்த இந்திய மத்திய அரசின் செயலிற்கு ஆட்சேபம் தெரிவிக்க முயன்ற தமிழ்நாடு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிட்டு வந்த கப்பலின் 9 பணியாளர்கள் விபரம்

### விசாக பட்டினம் தளத்தில் தடுத்து வைப்பு

நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டு சென்னைக்கு இழுத்து வரப்பட்ட விடுதலைப் புலிகளின் கப்பலில் வந்தவர்கள் எனக் கூறப்படும் ஒன்பதுபேர் விசாகபட்டினம் அருகேயுள்ள இந்தியக் கடற்படைத் தளத்திற்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். இவர்களில் காயமடைந்திருந்தவர்களான பற்குணலிங்கம் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரும் சிகிச்சைக்காக மருத்துவக் கப்பலில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# புல்மோட்டையில் புலிகள் அதிரடி அதிகாரி உட்பட 14 படை பலி;

[திருக்கோணமலை]

திருக்கோணமலை மாவட்டம் புல்மோட்டையில் சிறிலங்கா இராணுவரோந்து அணி மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட 14 இராணுவத்தினர் பலியாகினர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் மேஜர் அருண்மொழி உட்பட எட்டு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

14 ஆம் கட்டை இராணுவ முகாமிலிருந்து டபிள் மலை இராணுவ முகாம் நோக்கி றோந்து சென்று கொண்டிருந்த 25 க்கும் மேற்பட்ட ராணுவத்தினரைக் கொண்ட அணி மீது இடைமறித்து சுற்றிவளைத்து இத்தாக்குதல் காலை 8.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை 14ஆம் கட்டை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினரை முன்னேற விடாது முகாம் மீதும் புலிகள் தாக்குதலை நடாத்தினர். மேலும் "டபிள்மலை" இராணுவ முகாமிலிருந்து வெளியேறி நான்கு கவசவாகனங்கள் சகிதம் வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீதும் வழி மறித்து தாக்குதல் நடாத்தப்பட்டது. இத்தாக்குதல்களால் 14 இராணுவத்தினர் பலியாகியதுடன் இவர்களிடமிருந்து ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## வீரச்சாவு



லெப். எல்லாளன (நிகடா)

[யாழ்ப்பாணம்]

அளவெட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 9 10 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த லெப்டினன்ட் எல்லாளன் - நிகடா (இராசதுரை சிறீகாந்தன் சுழிபுரம் தெற்கு) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# கைப்பற்றப்பட்டவை

(திருக்கோணமலை)

புல்மோட்டையில் சிறிலங்கா இராணுவத்திடமிருந்து நேற்று விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ | ஏ. கே. எல் எம் ஜி | — 01 |
| ★ | ரி 81 - 1 ரக துப்பாக்கி | — 08 |
| ★ | ரி 56 பட்மொடல் துப்பாக்கி | — 01 |
| ★ | ஏ. கே. எல். எம். ஜி ரம்மகசின் | — 01 |
| ★ | ஏ கே. எல். எம். ஜி லிங் | — 50 |
| ★ | ரி 81 மகசின் | — 29 |
| ★ | நடுத்தர ரவைகள் | — 1294 |
| ★ | ஏ கே மகசின் | — 04 |
| ★ | ஜே. ஆர் கைக்குண்டு | — 02 |
| ★ | ஏ. கே எல். எம். ஜி கோல்சர் | — 01 |
| ★ | ஏ. கே கோல்சர் | — 07 |
| ★ | சப்பாத்து (சோடி) | — 06 |
| ★ | இராணுவப் பட்டி | — 03 |

# 8 போராளிகள் வீரச்சாவு

(திருக்கோணமலை)

புல்மோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் எட்டு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். வீரச்சாவு அடைந்த;

திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர்,

மேஜர் அருண்மொழி / கௌதமன் (சுப்பிரமணியம் சத்தியேந்திரன் - வித்தியாலயம் ஒழுங்கை, திருமலை)

கப்டன் செல்வக்குமரன் / சுகுமார் (இரத்தினசிங்கம் ராகவன் - கடற்கரைச்சேனை - மூதூர்)

கப்டன் வீணைக்கொடியோன் / வர்ணன் [சண்முகலிங்கம் - விஜயன் வரணமேடு, தம்பலகமம்]

லெப்டினன்ட் காரிவண்ணன் / ஒஸ்னஸ் [பொன்னுக்கோன் செல்வக்கோன் - 2-ம் வாட், நிலாவெளி. திருமலை]

லெப்டினன்ட் காண்டீபன் [கனகரெத்தினம் செல்வராசா - முள்ளிப்பொத்தானை, தம்பலகமம்]

வீரவேங்கை பிரியன் [இருதயநாதன் மல்கம் கோல்சிர் - லிங்கநகர். திருமலை]

வீரவேங்கை இளவேனில் / துஷான் [தில்லையம்பலம் ரவிதான் - முன்மாரித்திடல், தம்பலகமம்]

வீரவேங்கை இளவரசு / ரவிக்காந் [இராசரெட்ணம் சிவனேசன் - பள்ளிக்குடியிருப்பு, மூதூர்]

ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## உரிமையை யாரிடமும் கேட்டு பெறப் போவதில்லை

"நாம் ஆயுதம் எடுத்த அன்றே எமது இலட்சியத்தை அடைவோம் என்ற நம்பிக்கையை பெற்றோம். நாம் எமது உரிமையை எவரிடமும் கேட்டுப் பெறப் போவதில்லை. அடித்தே பெறப்போகிறோம்."

(தளபதி கிட்டு பெப்ரவரி 86)

## வரி விளம்பரம்

### கலண்டர்கள் விற்பனைக்கு

அழகிய படத்துடனான மினி கலண்டர்கள் தொகையாக கொள்வனவு செய்பவர்களுக்கு ரூ 6/-க்கு விளாசம் பதிப்பித்துக் கொடுக்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம், புத்தக சாலை 330, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (4017)

### காணவில்லை

வரப்பிரகாசம் யோண் பப்டிஸ் தவராசா என்ற எனது அடையாள அட்டை தொலைந்துவிட்டது இதைக் கண்டெடுத்தவர்கள் மொடேன்ஸ்ரோர்ஸ் நெல்லியடிக்கு தயவு செய்து அறியத்தரவும் [3412]

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். [சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு] தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி. [வானவில் கூல்பார் அருகாமையில்] யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. [சி-5795]

### கூட்டுறவுக் கிளையில் திருட்டு

புலோலி வடகிழக்கு உத்திராவத்தையிலுள்ள பலநோக்குக்கூட்டுறவுச்சங்க கிளை ஒன்றும் தனியார் விற்பனை நிலையமொன்றும் இரவுவேளையில் உடைக்கப்பட்டு நுகர்வுப் பொருள்கள், பணம் உட்பட சுமார் 20,000 ரூபா திருடப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

புலோலி ப.நோ.கூ. சங்கத்தின் புலோலி கிழக்கு மத்திய கிளை சனிக்கிழமை இரவு உடைக்கப்பட்டு சுமார் 12 000 ரூபா பெறுமதியான நுகர்வுப் பொருள்களும், அதே இரவு அதற்கு அருகாமையில் உள்ள திரு. ச. நவரத்தினம் கடை உடைக்கப்பட்டு பணம், நுகர்வுப் பொருள்கள் உட்பட சுமார் 8 000 ரூபா திருடப்பட்டுள்ளதாகவும் புகார் செய்யப்பட்டது. இத்திருட்டுகள் சம்பந்தமாக தமிழீழகாவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (25)

### பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

தென் புலோலி சிங்கை நகர் உதய சூரியன் சனசமூக நிலையப் பொதுக்கூட்டம்

## எதிர்க்கட்சிப் பாத யாத்திரை ஹொரகொல்லையில் ஆரம்பம்

சிறிலங்கா அரசாங்கத்தின் பொருளாதார திட்டங்களை எதிர்த்தும், வடக்கு. கிழக்கு யுத்தம் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் சிறிலங்காவின் எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணி பாதயாத்திரை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

ஹொரகொல்லையில் இருக்கும் பண்டாரநாயக்கா சமாதியில் இருந்து காலிமுகத்திடலில் இருக்கும் பண்டாரநாயக்கா சிலை வரையிலான இந்தப் பாத யாத்திரையில் எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணியைச் சேர்ந்த பத்துக் கட்சிகள் கலந்து கொள்கின்றன இந்தப் பாதயாத்திரை தொடர்பாக கருத்து தெரிவித்த சுதந்திரக் கட்சி எம்.பியான மகிந்த ராஜபக்ஷ அரசுக்கு எதிரான பல கட்சிகளையும் ஒன்று சேர்த்துள்ளோம் எனவும், அரசுக்கு எதிரான மக்களை ஒன்று சேர்க்கவே முயல்கின்றோம் எனவும் குறிப்பிட்டார்.

## கண்ணீர் அஞ்சலி

தொப்புள் கொடி அறுந்த போதே
வீரத்தமிழனாகி
ஒப்பில்லா வீர சாதனை படைத்தாய்
தப்பில்லா தமிழீழம் மலர்ந்திடவே
அந்தோ
கப்பலிலா உன் வீர மரணம்
தாங்குமோ எம் இதயம்.

வீரமரணம் அடைந்த

**கேணல் கிட்டுவிற்கும்**

**ஏனைய ஒன்பது போராளிகளுக்கும்**

**எமது கண்ணீர் அஞ்சலியை**

**தெரிவித்துக்கொள்ளுகிறோம்.**

சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்கம்
(4027) யாழ். மாவட்டம்.

## வீரவணக்கம்



வவுனியாவில்

## கொப்பேகடுவ வீதி திறக்க சிலர் முயற்சி; தமிழர் ஆத்திரம்

[வவுனியா]


வவுனியா நகர்ப் பகுதியின் ஓர் இடத்தை 'கொப்பேகடுவ மாவத்த' என்று பெயர் மாற்றம் செய்வதற்கு அரசாங்க அதிகாரிகள் சிலர் எடுத்து வரும் முயற்சிகள் தமிழ்மக்கள் மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா பஸ் நிலையத்திற்கு எதிரேயுள்ள "முதலாம் குறுக்குத் தெரு" என்ற வீதி அமைந்துள்ள இடத்தையே கொப்பேகடுவ மாவத்தஎன்று பெயர் சூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா நகரை சிங்களமயப்படுத்தும் முயற்சிகளில் இதுவும் ஒன்று என்று கருதும் தமிழ் அதிகாரிகள் சிலர், அரசாங்கத்தின் இந்த முயற்சியைக் கண்டித்துள்ளனர்.

மேற்படி, முதலாம் குறுக்குத் தெரு பகுதியை பெயர் மாற்றம் செய்வதற்கு வவுனியா நகரசபைசிபார்சுசெய்ய வேண்டும் என்று அரசாங்க உயர் அதிகாரிகள் சிலர் வவுனியா நகரசபையிடம் கேட்டுள்ளனர். நகரசபை இதுசம்பந்தமாக 'நோட்டீஸ்' மூலம் பொது மக்களின் அபிப்பிராயத்தைக் கேட்டுள்ளது.

## கண்ணீர் அஞ்சலிகள்



**கேணல் கிட்டு**

வல்லவராய் எம் மண்ணின் வரலாற்று நாயகராய்
நல்லவராய் நமக்காக நம்மோடு வாழ்ந்த அன்பர்
தொலைவதனில் எமக்காக உயிர்நீத்த செய்தியினால்
எல்லையில்லாத் துயரோடு எம்கண்ணீர் சிந்துகின்றோம்.

வடமாகாண தெங்கு பனம்பொருள்
கூட்டுறவு சங்கங்களின் சமாசம்
(சி-5818)

## நினைவு கூருகின்றோம்..

## 1993-01-19

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு - இருதயபுரம் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் வீரச்சாவெய்திய -

லெப். கபா (ச. ஜெயராஜ் தாண்டவன்வெளி - மட்டக்களப்பு)

லெப். அரசன் (க. சகாயராசா இருதயபுரம் - மட்டக்களப்பு)

தாசன் (டொமினிக் யேசுதாசன் - மட்டக்களப்பு)

ராஜ் (நித்தியானந்தன் ராஜ்குமார் - மட்டக்களப்பு)

இதே சுற்றிவளைப்பின் போது வீடுகளுட் பூட்டி எரிக்கப்பட்டும், சுட்டும் கொல்லப்பட்ட 30 தமிழர்கள்.

யாழ்ப்பாணம் - ஏழாலைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களின் போது சுடப்பட்டுக் காயமுற்றிருந்து. இதேதினம் உயிரிழந்த உடுப்பிட்டியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1987 ஆம் ஆண்டு சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சின் போது விழுப்புண் அடைந்திருந்து, சிகிச்சை பெற்று வருகையில் வீரச்சாவெய்திய -

சாள்ஸ் (மகாதேவன் மணிவண்ணன் - 'மிதிலை' அரசடி ஒழுங்கை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை - யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி - திருநகர் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

ஜெயசீலன் (கந்தையா மனோகரன் - சிவநகர் உருத்திரபுரம் - கிளிநொச்சி)

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சி - ஆனையிறவு, சுண்டிக்குளம் பகுதியில் படகில் வந்த இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு வசாவிளானில் வீரச்சாவெய்திய-


ஜெயந்தன் (நாகமுத்து யோகராசா - புன்னாலைக் கட்டுவன் தெற்கு, சுன்னாகம் - யாழ்ப்பாணம்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
(சி/5806)

## இந்தியப் படையின் இரத்த வெறியை அடக்க தன்னுயிர் நீத்த வேங்கைகட்கு

# கண்ணீர் (பா)மாலை



யப்பட்டுள்ளது.

புலோலி ப.நோ.கூ. சங்கத்தின் புலோ கிழக்கு மத்திய கிளை சனிக்கிழமை இரவு உடைக்கப்பட்டுசுமார் 12 000 ரூபா பெறுமதியான நுகர்வுப் பொருள்களும், அதே இரவு அதற்கு அருகாமையில் உள்ள திரு. ச. நவரத்தினம் கடை உடைக்கப்பட்டு பணம், நுகர்வுப் பொருள்கள் உட்பட சுமார் 8 000 ரூபா திருடப்பட்டுள்ளதாகவும் புகார் செய்யப்பட்டது. இத்திருட்டுகள் சம்பந்தமாக தமிழீழகாவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (25)

### பொதுக்கூட்டம்
(பருத்தித்துறை)

தென் புலோலி சிங்கைநகர் உதய சூரியன் சனசமூக நிலையப் பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் தலைவர் திரு வி ஜி தங்கவேல் தலைமையில் நடைபெற்றது. புதிய தலைவராக திரு. நா. ஆனந்தனும் செயலாளராக செல்வி சு சுமதியும், பொருளாளராக செல்வி ச. ராஜினியும் தெரிவு செய்யப்பட்டனர் (25)

### கருத்தரங்கு

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பாலர்பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான அபிவிருத்திக் கருத்தரங்கொன்று யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தால பருத்தித்துறை பிரதேசசபை செயளாளர் திரு சட்டநாதர் செல்வத்திநாதர் தலைமையில் பருத்தித்துறை பிரதேசசபை தலைமை யலுவலகத்தில் நடாத்தப்பட்டது. [25]



வங்கக் கடலினிலே
வல்லாதிக்க வலையினிலே
தங்கத் தமிழுக்காய்
தம்முயிர் தனையீந்த
வீர மறவர் பதின்மருக்கும்
**வீரவணக்கங்கள்**

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
தென்மராட்சிக் கல்விக் கோட்டம்

குறிப்பு: இன்று பி. ப. 4 மணிக்கு தென்மராட்சி மாணவர் அமைப்புக் காரியாலயத்தில் முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடைபெறவிருப்பதால் சகல நிர்வாகிகளும் தவறாது சமூகமளிக்கவும். (4039)

## கண்ணீர் அஞ்சலி

**தமிழீழ விடுதலைப் புலிகளின்**
**மூத்த தளபதி**
# கேணல் கிட்டுவிற்கும்

**மற்றும் ஒன்பது வீரப்போராளிகளுக்கும்**
**வீரவணக்கத்தையும் ஆழ்ந்த அனுதாபத்தையும்**
**கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கை ஆக்குகின்றோம்.**

**வட பிராந்திய வர்த்தகர்**
**சங்கங்களின் சமாசம்**

**முக்கிய குறிப்பு**

20-01-1993 நாளை புதன்கிழமை நடக்க இருக்கும் ஹர்த்தால் தினத்தன்று சகல வர்த்தக நிலையங்களையும் பூட்டி இந்திய கண்டன பேரணியில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம.


[4025]

(சி-5818)

**இந்தியப் படையின் இரத்த வெறியை அடக்க**
**தன்னுயிர் நீத்த வேங்கைகட்கு**

# கண்ணீர் (பா)மாலை

## தளபதி கேணல்
# கிட்டு [சதாசிவம் கிருஷ்ணகுமார்]



கிட்டு மாமாவுடன்
சிட்டாகப் பறந்து சிறகொடிந்த
குட்டி சிறி வேலன்
ஜீவா குணசீலன்
மற்றும்
றொசான். நாயகன், தூயவன்
நல்லவன், அமுதன்
வங்கக் கடலில் - எழுந்த
தீக் கொழுந்தின் கொடிய வேங்கைகளே!
நீங்கள்!
இந்திய துரோகத்தின் முதல் ஆகுதியா?
இல்லை, இல்லை!
இது அவர்களது துரோகத்தனத்தின்
தொடர்ச்சியே!

இதனால்!
எரிமலையாகி
எழும்பும் ஆயிரம் ஆயிரம்
வீரவேங்கைகள் - இத்
துரோகிகளுக்கே சமாதி படைப்பர்!


**- யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி**
**உத்தியோகத்தர்கள் -**

(சி/5816)

# வல்வை பெற்ற மாணிக்கமே!


## வரலாறு பல படைத்த வரிப்புலியே !!

# வங்கக் கடலில் நீ காவியமானாயோ !!!



தங்கத்தமிழீழம் மலர வேண்டும்
தரணியிலே தமிழனுக்கோர்நாடுவேண்டுமென
தாகம்கொண்டுழைத்தகிட்டுஇன்று ...
காவியம்ஆனான்கடலில்கலந்து.
சாகசங்கள்பலபுரிந்தவன்
சமாதானத்தூதோடுவந்தவன்.

இந்தியாவின் சதியால் எம்மைப்பிரிந்த தளபதி கேணல் கிட்டு



இந்தியாவின் சதியால் எம்மைப்பிரிந்த தளபதி கேணல் கிட்டு
அவர்களுக்கும், அவரோடு வீரச்சாவடைந்த ஏனையோருக்கும் எமது

# கண்ணீர் அஞ்சலிகள்

**அழகுநிலா நகைமாடம்**
213- கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**வான்மதி நகைமாடம்**
171- கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**தமிழ்மதி நகைமாடம்**
82/6 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**தமிழ் நிலா நகைமாடம்**
பேருந்து. நிலையம்,
நெல்லியடி-கரவெட்டி.

**தமிழ்ப்பரிதி நகைமாடம்**
15, புதிய சந்தை,
சாவகச்சேரி.

(சு5814)

# இந்தியச் சதிக்கு இரையாகி
# தமிழ் உலகின் மறம் பேண
# தற்கொடை ஈந்த




லெப் கேணல் குட்டிசிறி


மூத்த தளபதி

## கேணல் கிட்டு


அவர்களுக்கும்

**இணைந்த ஏனைய நவ வேங்கைகளுக்கும்**
**சிரம் தாழ்த்தி அவர் தம் தியாகத்தை**
**கௌரவிக்கின்றோம்.**







மேஜர்
**வேலன் (மலரவன்)**



கடற்புலி கப்டன்
**ஜீவா**




கடற்புலி கப்டன்
**றொசான்**



கடற்புலி கப்டன்
**குணசீலன் (குணராஜ்)**












மேஜர்
**வேலன் (மலரவன்)**



கடற்புலி கப்டன்
**ஜீவா**



கடற்புலி கப்டன்
**றொசான்**



கடற்புலி கப்டன்
**குணசீலன் (குணராஜ்)**




கடற்புலி கப்டன்
**நாயகன்**



கடற்புலி லெப்டினன்ட்
**அமுதன்**



கடற்புலி லெப்டினன்ட்
**நல்லவன்**



கடற்புலி லெப்டினன்ட்
**தூயவன்**


| | | | |
|---|---|---|---|
| எழிலகம் | சுவையருவி | மின்வளம் | படமாடம் |
| தமிழகம் பாஷையூர் | நெய்தலகம் வல்வெட்டித்துறை | தமிழகம் நாவாந்துறை | தமிழகம் கரையூர் |
| நீர்நிதி | இன்சுவை | பசுஞ்சோலை | இளவேனில் தையல் நிலையம் |
| | யாழ் வணிகமாடம் | இரும்பு விற்பனை அகம் | |

(9-5808)

## கலந்துரையாடல்

தீவகக் கோட்டத்திற்குட்பட்ட மாணவர் மறுமலர்ச்சிக் கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களுடனான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 24-ம் திகதி மாலை 4.00 மணிக்கு யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு இன்பன் அவர்களும் கலந்து கொள்ளவிருக்கிறார் என தீவகக் கோட்டமாணவர் அமைப்பின் உதவிப் பொறுப்பாளர் திரு. ஒப்பிலாமணி தெரிவித்துள்ளார்.

## அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

வண்ணார் பண்ணை சிவன் கோவில் பரிபாலன சபையினர் கடந்தவருடத்தில் கிளிநொச்சி உருத்திரபுரத்தில் உள்ள சாந்தி நிலையம் என்னும் குழந்தைகள் பராமரிப்பு இல்லத்திற்கு 1,33 855 ரூபாவையும், கிளிநொச்சி ஜெயந்திநகர் குருகுலம் இல்லப் பராமரிப்புக்காக 25,000 ரூபாவையும்யாழ் போதனா வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச்சங்கத்தின் பராமரிப்பு வேலைக்காக 25,000 ரூபாவையும். பளை வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் பராமரிப்புத் தேவைக்காக 10,000 ரூபாவையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

## பால் எடுத்துச் செல்ல ராணுவ தடைவிதிப்பு

[வவுனியா]

வவுனியா நகர பாற்பண்ணைக்கு வடபுறம் கிராமப் பகுதிகளிலிருந்து யாழ் வீதி ஊடாக பால் எடுத்துச் செல்லப்படுவதை சிறிலங்கா இராணுவம் தடைசெய்துள்ளது

கிராமப்புற பகுதிகளில் வாழ்வோர் தமது பண்ணைகளில் பெறப்படும் பெருமளவிலான பாலை விற்பனை செய்வதற்காக நகர பாற்பண்ணையை நோக்கி எடுத்துச் செல்வது வழமை. கடந்த 15 ஆம் திகதியுடன் இதை இராணுவம் தடை செய்துள்ளது.

இதன் காரணமாக நூற்றுக்கணக்கான மாடு வளர்ப்போர் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். [தி]

## சார்க் நாட்டுக்கு தூதுவராக செல்ல முடிவில்லையாம்


(கொழும்பு)

வெளிநாட்டுத் தூதுவராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இராஜாங்க அமைச்சர்கள் எவரும் செல்வது பற்றி இ தொ. கா. எதுவித முடிவும் எடுக்கவில்லையென இ. தொ. கா. செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

தமிழ் இராஜாங்க அமைச்சர்களில் ஒருவர் வெளிநாட்டுத் தூதுவராக "சார்க்" நாடுகளில் ஏதாயினும் ஒரு நாட்டிற்குச் செல்வது குறித்து பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இ. தொ. கா. சார்பில் இரண்டு இராஜாங்க அமைச்சர்கள் இருக்கிறோம். இது பற்றி இ. தொ. கா. தான் வெளிநாட்டுத் தூதுவராக எவரையும் அனுப்ப முடிவு செய்ய வேண்டும். அப்படி எதுவித முடிவும் இ. தொ. கா. எடுக்கவில்லை.

## 90-ம் நாள் நினைவஞ்சலி



வீரஜனனம்

15.04-1975

வீரச்சாவு

[illegible]2-10 199[illegible]

### வீரவேங்கை காங்கேயன்

(பாலசிங்கம் விமலன்)

வீரத்தாய் பெற்றெடுத்த விமலா
வீர நடையோடு வீரவேங்கையாய் எழுந்து
வீணரோடு எதிர்த்து விடுதலைக்காய்
உரமான காங்கேயா
உன் தாகமதை தாயகமாக
அடைவோம் மீண்டும்
விரைந்து காண்பாய் வந்து

காங்கேயனுடன் புனித பயணம் சென்ற ஏனைய 14 வேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

அன்புப்பெற்றோர்.
ஆசை அண்ணா, அருமைத்தங்கை
கொத்தம்பியாகுளம்,
துணுக்காய்.

அம்மம்மா, மாமாமார்,
சித்தப்பாமார், அன்ரிமார்,
அத்தைமார், சகோதரர்கள்
'தவகிரி'
கேணியடி லேன்,
மீசாலை, தெற்கு
மீசாலை.

(சி/5798)

## இதய அஞ்சலி

வங்கக் கடலில் வரலாற்றுக் காவியமான தங்கத் தளபதி கேணல் கிட்டு அவர்களுக்கும் யோங்கும் கடலில் பொன்னுயிர் நீத்த வேங்கை வீரர்கள் ஒன்பது பேருக்கும்

**எம் இதயம் வடிக்கும் செந்நீர் அஞ்சலிகள்.**

சித்த மருத்துவத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்,
கைதடி.

(4035)

## வீர வணக்கம்



இந்திய அரசின் நாச வேலைக்கு அடிபணிய மறுத்து நடுக்கடலில் கப்பலைத் தகர்த்து, வீரச் சாவைத் தழுவிக் கொண்ட


### மூத்த தளபதி கேணல் கிட்டு

(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

லெப். கேணல் குட்டிசிறி

மேஜர் வேலன் கப்டன் நாயகன்

## வீர வணக்கம்



மூத்த உறுப்பினரும்
முன்னாள்யாழ்.மாவட்டத்
தளபதியும் ஆகிய

**கேணல் கிட்டு**

[சதாசிவம் கிருஷ்ணகுமார்]


லெப். கேணல் குட்டிசிறி

| | |
|---|---|
| மேஜர் வேலன் | கப்டன் குணசீலன் |
| கப்டன் ஜீவா | கப்டன் றொசான் |
| கப்டன் நாயகன் | லெப். அமுதன் |
| லெப். தூயவன் | லெப். நல்லவன் |

ஆகிய போராளிகளுக்கு எமது வீரவணக்கங்கள்

செவிப்புலன் வலுவற்றோர்
இல. 426, கே.கே.எஸ்.வீதி, புனர்வாழ்வு நிறுவனம்,
யாழ்ப்பாணம். செவிப்புலன் வலுவற்றோர்
(4023) நல்வாழ்வு நற்பணிநிறுவனம்.

## கண்ணீர் அஞ்சலி



### தளபதி கேணல் கிட்டு

சதாசிவம் கிருஷ்ணகுமார்

எம் வாசலில் அன்று காலடி பதித்தாய்
பாசத்தின் நினைவை எம்மில் வளர்த்தாய்
படகுப் பயணத்தில் பாரதத்தின் பாதகர் செயலைக் கேட்டு
பதைக்குதே எங்கள் நெஞ்சு

## கண்ணீர் அஞ்சலி

**கிட்டண்ணா!**

வீரத்திற்கு
பெயர் சூடும் பிளம்பே!
விலங்கிடப்பட்ட மனிதகுலம்

லான பாலை விற்பனை செய்வதற்காக நகர பாற்பண்ணையை நோக்கி எடுத்துச் செல்வது வழமை. கடந்த 15 ஆம் திகதியுடன் இதை இராணுவம் தடை செய்துள்ளது.

இதன் காரணமாக நூற்றுக்கணக்கான மாடு வளர்ப்போர் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். [தி]

அம்மம்மா, மாமாமார்,
சித்தப்பாமார், அன்ரிமார்,
அத்தைமார், சகோதரர்கள்
'தவகிரி'
கேணியடி லேன்,
மீசாலை, தெற்கு
மீசாலை.

கொத்தம்பியாகுளம்,
துணுக்காய்.

(சி/5798)

# கண்ணீர் அஞ்சலி

முன்னாள் யாழ். மாவட்ட தளபதி கிட்டு (கிருஷ்ணகுமார்)வுக்கும் அவருடன் உயிர் நீத்த 9 போராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்.

(4032)

**கிட்டண்ணா!**
வீரத்திற்கு
பெயர் சூடும் பிளம்பே!
விலங்கிடப்பட்ட மனிதனும்
ஓர் 'விலங்கு' தான்
என்று உரைத்தவரே!
நீர்
கடல் பூக்க காவியமானீரோ!
கண்கள் சிவக்க நாம்
கதறி நிமிர்கின்றோம்.

-முல்லை, மணலாறு
தண்ணீரூற்று,
நகைத்தொழிலாளர்கள்.



இந்திய அரசின் நாச வேலைக்கு அடிபணிய மறுத்து நடுக்கடலில் கப்பலைத் தகர்த்து, வீரச்சாவைத் தழுவிக் கொண்ட

## மூத்த தளபதி கேணல் கிட்டு

(சதாசிவம் கிருஷ்ணகுமார்)
லெப். கேணல் குட்டிசிறி

| | |
|---|---|
| மேஜர் வேலன் | கப்டன் நாயகன் |
| கப்டன் குணசீலன் | லெப். அமுதன் |
| கப்டன் ஜீவா | லெப். நல்லவன் |
| கப்டன் றொசான் | லெப். தூயவன் |

ஆகியோருக்கு எமது
**வீர அஞ்சலியைச்**
செலுத்துகிறோம்

தென்மராட்சி கிழக்கு
தெ. ப. பொ. கூட்டுறவுச்சங்கம்,
கொடிகாமம்.

(சி-5813)



## தளபதி கேணல் கிட்டு

சதாசிவம் கிருஷ்ணகுமார்

எம் வாசலில் அன்று காலடி பதித்தாய்
பாசத்தின் நினைவை எம்மில் வளர்த்தாய்
படகுப் பயணத்தில் பாரதத்தின் பாதகர் செயலைக்
கேட்டு

பதைக்குதே எங்கள் நெஞ்சு
கதறுகிறார்கள் கண்ணாடி மாமாவென பிஞ்சு
நெஞ்சங்கள்

தளபதி கிட்டுவுடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஒன்பது போராளிகளுக்கும் கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மாவீரன் பணக்காரன்
(அமலதாஸ்) குடும்பத்தினர்

89, புதியகடற்கரைவீதி,
குருநகர்.

[சி-5815]

# வீர வணக்கமும் கண்ணீர் அஞ்சலியும்

13. 01. 1993 சர்வதேச கடற்பரப்பில் இந்தியக் கடற்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு

**வீரச்சாவைத் தழுவிக்கொண்ட**

# கேணல் கிட்டு

(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

மற்றும் ஏனைய ஒன்பது வீரவேங்கைகளுக்கும்


**எமது அஞ்சலிகள்**

தங்கத் தமிழ்த் தலைவா - கிட்டு
வங்கக் கடலில் சங்கமித்தாயோ
பொங்கும் உணர்வுகள் யாவற்றையும்
மங்கச் செய்தனரே இந்தியர் பெருஞ் சதி

**"தமிழீழ தாயகம் மலர**
**தம்முயிர் நீத்து நிற்கின்றனர்"**

யாழ். செயலக அனைத்து
உத்தியோகத்தர்களும் ஊழியர்களும்

(சி/5812)



# தமிழர்களை வெளியேற்ற சுவிஸ் அரசு நடவடிக்கை?

சுவிட்சர்லாந்து நாட்டின் குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் சட்டவிரோதமாக நாட்டுக்குள் புகுந்த தமிழர்களை வெளியேற்றும் நடவடிக்கையைத் துரிதப்படுத்தியிருப்பதாகவும், கடந்த சில வாரங்களில் மட்டும் 47,000 இலங்கைத் தமிழர்கள் இவ்விதம் வெளியேற்றப் பட்டிருப்பதாகவும் ஜெனிவாவிலிருந்து வரும் செய்திகளைமேற்கோள்காட்டி ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் கைதாவதையும், நாடுகடத்தப்படுவதையும் தவிர்க்கும் பொருட்டு சுவிஸ் அதிகாரிகளின் பிடியிலிருந்து தப்பியுள்ள சுமார் மூவாயிரம் இலங்கைத்தமிழர்கள் தலைமறைவாகியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

சூரிச், ஜெனிவா மற்றும் சில நகரங்களில் அண்மையில் இடம் பெற்ற சில துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் பின்னர் தான் சுவிஸ் அதிகாரிகள் இந்தக் கடும்நடவடிக்கையை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

# இந்த நாடு சிங்களவருக்குரியது வேறுஇனத்திற்கு உரித்தில்லை

## - பௌத்த பிக்கு தெரிவிப்பு

(கொழும்பு)

எமக்குரிய இந்த நாடு கடந்த 2500 வருடங்களாக சிங்கள நாடாக இருக்கின்றது. இந்த நாடு வேறு இனத்தவருக்கோ மதத்தினருக்கோ உரிய நாடு இல்லை. பெரும்பான்மையான மக்கள் சிங்கள மொழியை பேசுபவர்களாகவும், பௌத்தமதத்தை வழிபடுபவர்களாகவும் உள்ளனர் எனினும் சிலஇடங்களில் சிங்களவர்களுக்கு சிங்களமொழியை பேசவோ பௌத்த மதத்தை வழிபடவோ முடியாதிருப்பதாக பலப்பிட்டிய அமரபுர ஷலகண்டி மகா அனு நயக்க வலகெதர அமர வன்ச அனுனா தேரோ தெரிவித்தார்

அவர் மேலும் உரையாற்றுகையில், இன்று வடக்கு கிழக்கு யுத்தத்தில் மரணபடையும் படையினர் தமது சொத்துக்காகவோ, சுகத்திற்காகவோ மரணமடையவில்லை எனவே நாம் இராணுவத்திற்கு உற்சாகம் அளிக்க வேண்டும் இல்லையேல் எமது இனம் முழுவதும் அடிமையாகி விடும் எனவும் குறிப்பிட்டார்.

தமிழகத்திலிருந்து வரும்

# அகதிகள் குடியமர்வதில் கூ. படைகள் முட்டுக்கட்டை

(வவுனியா)

இந்தியாவிலிருந்து நாடு திரும்பி வந்துள்ள ஆயிரக்கணக்கான அகதி மக்களை இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு புனர்வாழ்வு, புனரமைப்பு சமூகசேவைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைக்கு கூட்டுபடைத் தலைமையகம் முட்டுக் கட்டையாக உள்ளது என்று நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவம் இல்லாத பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் அகதி மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொள்வார்கள் என்று கூட்டுப் படைகளின் இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளதை அடுத்து இவ்விடயத்தில் இழுபறி நிலை நீடிப்பதாக அறிய வருகிறது.

சமீபத்தில்வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற சந்திப்பில் ஹமில்டன் வனசிங்க இது பற்றி கூறியுள்ளார்.

இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு அகதி மக்களை அனுப்பி வைப்பது தற்கொலைக்கு ஒப்பானது. த ர அப்பகுதியில் இடம் பெறும் சண்டைகளின் போது அகதி மக்கள் இறக்க நேரிட்டால் அது வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்றும் ஹமில்டன்தெரிவித்துள்ளார்.

இதற்கு அமைச்சர் தயாரத்ன அகதி மக்களை முகாம்களில் வைத்து பராமரிக்கும் போதுஏற்படும் நிதி நெருக்கடியைப்பற்றிக் கூறினார்.

அகதி மக்கள் விடுதலைப் புலிகள்அமைப்பில் இணைந்து விடுவார்கள் என்பது அர்த்தமற்ற அச்சம். அப்படியாயின் வடபகுதி நோக்கிச் செல்லும் அனைவரையும் அரசாங்கம் ... வேண்டும் என்றும் கூறி

வவுனியா

# நகரப்பகுதி பாடசாலைகளில் ஆசிரியர் நிரந்தர நியமனம்

(வவுனியா)


வவுனியா நகரப் பாடசாலைகளில் தற்காலிக ஆசிரியர் நியமனம் பெற்று கல்வி கற்பித்து வந்த நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்கு வவுனியா கல்வித் திணைக்களம் நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

வவுனியா கிராமப்புறப் பாடசாலைகளுக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கே ... நகரில் ...ளது.

வவுனியா கல்வித் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் கிராமப்புறப் பாடசாலை மாணவர்களின் கல்வி நிலையில் அக்கறை செலுத்துவதில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு பிரதேசசபை செயலாளர் திரு. அமிர்தலிங்கத்தினால் தற்காலிக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் கிராமப்புறப் பாடசாலைகளுக்கு மீண்டும்

## யாழ். இந்து அன்னையின் கண்ணீர் அஞ்சலி



அந்நிய ஏகாதிபத்திய ஊடுருவலுக்கு
எதிரான புத்திஜீவிகளின் சுதந்திரச்
சின்னமாக அமைந்த எமது அன்னையின்
மைந்தர்கள் விடுதலை வேள்வியில்
ஆகுதியானது மட்டுமன்றி; போர்க்
களத்திலும் இன்றும் நிற்கின்றனர்
அந்நியப படைக்கு சரணடைய
மறுத்து மாகடலில் வீரச்சாவை
அடைந்த தளபதி கேணல்
கிட்டு உட்பட்ட பத்து
வீரமறவர்களுக்கும், எமது அன்னையின்
கண்ணீர் அஞ்சலிகள்.

யாழ் இந்துக்கல்லூரி
பழைய மாணவர்கள்.

(சி-5807)

## வீர வணக்கம்

இந்திய வல்லரசின் நயவஞ்சகத்தால்
வங்கக்கடலில் தம்முயிரை அர்ப்பணித்த
விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி

## கிட்டு மாமா

## [சதாசிவம் கிருஷ்ணகுமார்]

அவர்களுக்கும் ஏனைய கடற்புலிகளுக்கும்

மண்ணெண்ணெயுடன் வந்த

# வவுனியா தமிழ்ப்பகுதி கூட்டுறவின் லொறிகள் தடுத்து வைப்பு

வவுனியா தமிழ்ப்பிரிவு கூட்டுறவுச் சங்கக்கிளைகளுக்குரிய மண்ணெண்ணெயை ஏற்றி வந்த லொறிகள் பல நாட்களாக ஈரற்பெரியகுளம் வாகன சோதனைச்சாவடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

நான்கு வாரங்களாக இந்த லொறிகள் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை அடுத்து பாவனையாளர்கள் மண்ணெண்ணெயைப் பெற முடியாமல் தவிக்கின்றனர்.

இந்த லொறிகளை இராணுவம் தடுத்து வைத்திருப்பதற்கான காரணம்தெரியவில்லை.

## வீரவணக்கம்



## தளபதி கேணல் கிட்டு
## (சதாசிவம் கிருஷ்ணகுமார்)

நீ களமாடிடும் போதினிலே
கயவர்கள் எதிர்கொண்டால்....
கணக்கில்லாமல் அழிந்திருப்பர் அவர் தரப்பில்
கடலிலே கயவரின் கட்டளைக்கு பணிய
மறுத்து
வீர காவியமாய் நின்றாய் இன்று
காலத்தையும் காலனையும்
வென்றன்று நின்றாய் களித்திருந்தோம்
கதியேது மில்லாமல் கலங்குகின்றோம் இன்று
காவிய நாயகனே

வங்கக் கடலிலே காவியமான ஏனைய ஒன்பது வீர வேங்கைகளுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கிறோம்.

தமிழ்பேசும் போக்குவரத்து ஊழியர்
சங்கம்

வ. பி. போ. சபை,
பலாலி வீதி, கோண்டாவில்.

(சி/5810)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வவுனியா

## நகரப்பகுதி பாடசாலைகளில் ஆசிரியர் நிரந்தர நியமனம்

(வவுனியா)

வவுனியா நகரப் பாடசாலைகளில் தற்காலிக ஆசிரியர் நியமனம் பெற்று கல்வி கற்பித்து வந்த நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்கு வவுனியா கல்வித் திணைக்களம் நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

வவுனியா கிராமப்புறப் பாடசாலைகளுக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கே தற்போது நகரில் நியமனம் வழங்கப்படுகிறது. இதன் காரணமாக கிராமப்புற மாணவர்களின் கல்வித் தரம் தொடர்ந்து வீழ்ச்சியடையும் அபாயம் எழுந்துள்ளது.

வவுனியா கல்வித் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் கிராமப்புறப் பாடசாலை மாணவர்களின் கல்வி நிலையில் அக்கறை செலுத்துவதில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு பிரதேசசபை செயலாளர் திரு. அமிர்தலிங்கத்தினால் தற்காலிக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் கிராமப்புறப் பாடசாலைகளுக்கு மீண்டும் நியமிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்ட பின்பே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## குடாக்கடலில் மீனவர் மீது இராணுவம் துப்பாக்கிச் சூடு

குடாக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த குருநகர் மீனவர்கள் மீது கடந்த சனி இரவு மண்டைதீவு இராணுவம் பலதடவை சுட்டதாக தெரிவிக்கப்படுகிறது. குருநகர் மீனவர்கள் டிஸ்கோ வலைமூலம் பெரியவேலி எனுமிடத்தில் 16-01-93 மாலை 8.00 பணியளவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் மண்டைதீவுக் கரையிலிருந்து இவர்களை நோக்கி பல தடவை இராணுவம் கலிபர் மற்றும் ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் இம் மீனவர்கள் தமது பெறுமதிமிக்க மீன்பிடி உபகரணங்களையும் படகுகளையும் விட்டு நீந்திக்கரை சேர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

## தகவல் தொடர்பு சாதனம் பொலிசாரால் கண்டெடுப்பு

(கொழும்பு)

ஜே வி பியினரால் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் தகவல் தொடர்பு சாதனம் ஒன்று பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. காலி மொறவக்கை காட்டுப் பகுதியில் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிசார் நடத்திய சோதனை ஒன்றின்போது ஜப்பானில் தயாரிக்கப்பட்டதும், மிகவும் சக்தி வாய்ந்ததுமான இந்த தகவல் தொடர்பு சாதனம் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த இயந்திரம் நாட்டில் பதற்றம் நிலவிய காலப்பகுதியில் ஜே வி பி, யினர் பயன்படுத்தியிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

கொட்டேகடுவ விசாரணைக்குழு எப்போது

## மைவெளிச்சம் பார்த்துதான் தெரிந்துகொள்ள வேண்டும்

(கொழும்பு)

"லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மரணம் தொடர்பான காமன்வெல்த் விசாரணைக்கமிசன் எப்போது செயற்பட ஆரம்பிக்கும் என எதுவும் தெரியாது. மை வெளிச்சம் பார்த்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டும்"

இவ்வாறு சிறிலங்காவின் பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி.பி விஜயதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார். எதிர்க்கட்சி எம்.பி நிமால் சிறிபால டி சில்வா எழுப்பிய கேள்வியொன்றிற்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் கொப்பேகடுவவின் மரணம் தொடர்பாக ஆணைக்குழு உறுப்பினர்களை நியமிக்கும்படி காமன்வெல்த் பணிப்பாளர் நாயகத்திடம் அரசாங்கம் கேட்டுள்ளது. பணிப்பாளர் நாயகத்திடமிருந்து இதுவரை எதுவித பதிலும் கிடைக்கவில்லை என்றார்.

இல்லாத பகுதிகளுக்கு அகதி மக்களை அனுப்பி வைப்பது தற்கொலைக்கு ஒப்பானது, தரா அப்பகுதியில் இடம்பெறும் சண்டைகளின் போது அகதி மக்கள் இறக்க நேரிட்டால் அது வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்றும் ஹமில்டன் தெரிவித்துள்ளார்.

இதற்கு அமைச்சர் தயாரத்ன அகதி மக்களை முகாம்களில் வைத்து பராமரிக்கும் போது ஏற்படும் நிதி நெருக்கடியைப்பற்றிக் கூறினார்.

அகதி மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து விடுவார்கள் என்பது அர்த்தமற்ற அச்சம். அப்படியாயின் வடபகுதி நோக்கிச் செல்லும் அனைவரையும் அரசாங்கம் தடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

இராணுவம் அற்ற பகுதிகளுக்கு அகதி மக்கள் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இந் நடவடிக்கையில் இழுபறி நிலை இருப்பதாக அறிய வருகிறது.

## சனசமூக நிலையத்தில் திருட்டு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய நூல் நிலையத்தில் தைப்பொங்கல் தினம் இரவு பல பெறுமதிவாய்ந்த புத்தகங்கள் உட்பட நிலையத்தின் பெரிய விளம்பரப் பலகையையும் திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

இதேதினம் இரவு கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலய நன்னீர் இறைக்கும் புதிய வாளியும் இனந்தெரியாத நபர்களால் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்புத்துறை மேற்கு பாண்டியன் தாழ்வு அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தினதும், யாழ். சுண்டிக்குளி காட்டுக்கந்தோர் ஒழுங்கையிலுள்ள அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தினதும் உண்டியல் பெட்டிகளும் கடந்த 11-ம் திகதி இரவு இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டுள்ளன. (24)

## பாடும்மீன் அணிக்கு வெற்றிக் கேடயம்

அரியாலை சனசமூக நிலையத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட அமரர் குமரையா ஞாபகார்த்த உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் குருநகர் சென்றோக்ஸ் விளையாட்டுக் கழகத்தை 2 - 1 கோல்கள் அடிப்படையில் வென்று இவ்வருடத்துக்கான குமரையா வெற்றிக் கிண்ணத்தை இரண்டாவது தடவையாக வெற்றியீட்டியுள்ளது.

---

யாழ் இந்துக்கல்லூரி
பழைய மாணவர்கள்.

(சி-5807)

---

## வீர வணக்கம்

இந்திய வல்லரசின் நயவஞ்சகத்தால்
வங்கக்கடலில் தம்முயிரை அர்ப்பணித்த
விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி

**கிட்டு மாமா**

**[சதாசிவம் கிருஷ்ணகுமார்]**

அவர்களுக்குப் ஏனைய கடற்புலிகளுக்கும்
எமது வீர வணக்கத்தைச் செலுத்துகின்றோம்.

நா. தங்கவடிவேல் — தலைவர்
வே. சின்னையா — செயலாளர்

சமூக முன்னேற்றக்கழகங்களின்சமாசம்

(4029)

---

## 90-ம் நாள் நினைவஞ்சலி

| வீரஜனனம் | | வீரச்சாவு |
|---|---|---|
| 27 |  | 22 |
| — | | — |
| 08 | | 10 |
| — | | — |
| 1975 | | 1992 |

## 2ம் லெப். பிரதீபன் (ரங்கன்)

(சிவராசலிங்கம் பத்மசிறீ)

பால் மணம் மாறாப் பாலகனே ஸ்ரீ
பள்ளிப் படிப்பதனை பாதியிலே நிறுத்தி விட்டு
வேங்கைப் படையிலே சேர்ந்தவனே
உன் சிரிப்பாலும் பண்பாலும் பேச்சாலும்
வீரமான நடையாலும் எம் நெஞ்சங்களில்
உன் நினைவலைகள் நிஜமாய் நிற்கிறதே ஸ்ரீ
தொண்ணூறு நாட்கள் என்ன
தொள்ளாயிரம் ஆண்டுகள் போனாலும்
உம் நினைவலைகள் எம் நெஞ்சை விட்டு
நீங்காது பிரதீபா (ரங்கா)
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகிறோம்.

ஆனையிறவில் இவருடன் வீரச்சாவு அடைந்த சகல போராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்

நித்தம் உன்னை எண்ணி சித்தம் கலங்கும்
அம்மா, சகோதரர்,
சகோதரி பத்மசுகி (போராளி)
உற்றார், உறவினர்

391, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி.

(3981)

---

காவிய நாயகனே

வங்கக் கடலிலே காவியமான ஏனைய ஒன்பது வீர வேங்கைகளுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கிறோம்.

தமிழ்பேசும் போக்குவரத்து ஊழியர்
சங்கம்

வ. பி. போ. சபை,
பலாலி வீதி, கோண்டாவில்.

(சி/5810)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**நடேசபிள்ளை**
**தெய்வானைப்பிள்ளை**
(துணுக்காய்)

தோற்றம்: 01-07-19?5
மறைவு: 19-01-1992

நீக்கமற நிறைந்திருக்கும் அன்புத்தெய்வமே
நித்தமும் உன் நினைவால் வாடுகின்றோம்
பார்க்க மறந்துவிட்டாய் — நாம்
பரிதவித்து நிற்கின்றோம், பாரினிலே
உன் உணர்வுகளைத் தேடுகின்றோம்.
உதிர்த்து விட்டான் காலனவன்
உனக்காக வாடுகின்றோம்
எம் இதயம் வறளுமட்டும்.

ஓராண்டு சென்றாலும் உன் நினைவால் வாடும்
- கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

(3993)

சிந்தனைக்கு

நான் செய்தாக வேண்டும். செய்தே திருவேன். செய்ய என்னால் இயலும். செய்வது என் கடமை. இதோ செய்கிறேன்.

-றிச்சர்ட் செரிடன்-

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாண 19-01-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

## மனங்களில் நிறைந்த கிட்டு மாமா

விடுதலைப் புலிகளின் புகழ் பூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் கிட்டுவின் துயரச்செய்தி கேட்டு தமிழீழமே சோக மயமாகக் காட்சி அளிக்கின்றது. மக்கள் தமது துயரை வெளிக்காட்ட முடியாது தவிக்கின்றர்கள். தமது சக்திக்கும், அப்போதைய உணர்விற்கும் ஏற்ற வகையில் துயரை வெளிப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

இதன் வெளிப்பாடாக யாழ். குடாநாடு எங்கும் வாழை மரங்கள், தோரணங்கள் என்பனவற்றோடு கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. தளபதி கிட்டுவினதும், ஏனைய போராளிகளினதும் உருவப் படங்கள் வைக்கப்பட்டு மக்களால் பூ அஞ்சலியும், தீப அஞ்சலியும் செய்யப்படுகின்றன. சந்திகளில் சோக கீதங்கள் இசைத்த வண்ணம் உள்ளன, அத்தோடு தளபதி கிட்டுவின் வீர வரலாறு ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இதேவேளை, தளபதி கிட்டுவை சாகடித்த இந்தியாவின் மீது மக்களின் ஆத்திரம் திரும்பியுள்ளது. இந்தியாவிற்கு எதிரான கோஷங்களை மக்கள் எழுப்பியவாறு ஊர்வலங்களும், ஆர்ப்பாட்டங்களும் செய்துள்ளனர். இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் கொடும்பாவியையும், தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் கொடும்பாவியை பல இடங்களில் எரித்துள்ளனர்.

இவ்வாறாக மக்கள் சோகத்தின் விளம்பிற்குச் செல்லும் அளவிற்கும், அவர்கள் உள்ளத்தில் உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தும் அளவிற்கும் தளபதி கிட்டு மக்களின் மனதைக் கொள்ளை கொண்டிருந்தார். அவர் சுமார் நான்குவருடங்கள் தமிழ் மக்களை விட்டுப் பிரிந்திருந்தார். இருப்பினும் மக்கள் மனங்களை விட்டு அவர் அகலவில்லை.

மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடனும், போராளிகளுடன் சிறிலங்கா இராணுவத்தை முகாம்க

# ஆன்மபலமும், வீரமும் எம்மிடமுண்டு; சாவிற்கு நாம் என்றும் தயார்

அந்தப் பெயர் எப்படி அவருக்குக் கிடைத்தது?

நான் தமிழீழ விடுதலைப் போராளி இயக்கத்தைச் சேர்ந்தபோது, வெங்கிட் என்ற போர் முனைப் புனைப்பெயர் எனக்கு வழங்கப்பட்டது. அது வெங்கிட்டுஆகிப்பின்னர்கிட்டு என்று ஆயிற்று.

கிட்டு 1978 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து கொண்டார். அப்பொழுது அவருக்கு 18 வயது. ஒரு பள்ளிக்கூட மாணவனாக இருந்தார். எனது சொந்த ஊர் வல்வெட்டித்துறை ஆகும். 1950கள் முதற்கொண்டே இலங்கை அரசின் அடக்குமுறைக் கொடுமைகளுக்கு வல்வெட்டித்துறையினர் முகம் கொடுக்க வேண்டியோர் ஆனார்கள். சட்டவிரோதக் கடத்தல், அத்தகைய குடிவரவு என்பவற்றை மட்டுப்படுத்தலைச் சாட்டாக வெளிக்குக் காட்டிக்கொண்டு இலங்கை இராணுவம் எம்மைத் தொல்லைப்படுத்தியது.

இதையிட்டுஏ தாவதுசெய்ய வேண்டும் என எப்போதும் நான் விருப்பம் கொண்டிருந்தேன். நான் வளர வளர இந்த உள்ளக் கிடக்கையும் என்னுள்ளே வளர்ந்து வரலாயிற்று.

இது ஒரு புறமிருக்க, தமிழ் மக்களும் இலங்கை அரசாங்கத்தினால் அடக்கி ஒடுக்கப்பட்டு வந்தனர். இவ் அடக்குமுறையை நான் எதிர்த்துப் போரிட வேண்டியவன் ஆனேன். ஆகவே, புலிகள் இயக்கத்தில் நானும் சேர்ந்தேன். தலைவர் பிரபாகரனும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்தான்.

நான் இயக்கத்தில் சேர்ந்த அப்பொழுதெல்லாம் எனக்குப் பூரண அரசியல் உணர்வு இருக்கவில்லை. ஆனால் ஒரு விடுதலைப் போராளியாகும் நடைமுறைக்கு நான் ஆளாகிக் கொண்டு இருக்கையில் அரசியல் அறிவையும், உணர்வையும் நான் ஈட்டிக்கொண்டேன். போராட்டத்தின் வாயிலாக என்னை நான் வளர்ச்சிபெறச் செய்து கொண்டேன்.

குறித்த ஓர் அரசியல் உன்னத குறிக்கோளுக்கோ, கோட்பாட்டுக்கோ நீங்கள் சார்புடையவரா?

சரி, நான் சில அரசியற் கோட்பாடுகள் உடையவன் தான். அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் போரிட்டு நிற்பது அதற்காகத்தான். பூரணமாக நான் அதனை அனுசரித்து நடக்கின்றேன். செயலில் நம்பிக்கை வாய்ந்த ஒருவன் நான். தத்துவமோ, கோட்பாடோ மனித அக்கறைகளுக்குச் செயல் முறையில் பயன் தருவதாக இருத்தல் வேண்டும். அதில் தான் எனக்குக் கூடிய நம்பிக்கை உண்டு என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

நூற்கல்வி பற்றி வெறுமனே கதைப்பது, கலந்துரையாடுவது என ஒன்று உண்டு. அதைவிட நான் மிக விரும்புவது செயல்முறை நடவடிக்கையையே. முக்கியமானது அதுதான். உன்னத குறிக்கோளை யிட்டு நான் பேசுவதில்லை. உன்னத குறிக்கோளை நான் அறியேன். செயலிலேதான் எனது நம்பிக்கையெல்லாம் தங்கியிருக்கிறது.

புலிகள் இயக்க உறுப்பினரிடையே தலைமை இழுபறி கிடையாதா?

கிடையாது. ஏன் என்று நான் உங்களிடம் விளங்கக் கூறுகிறேன்; போர்க்களத்தில் இறந்தவர்களைப் பாருங்கள்.

> யாழ்ப்பாண மாவட்டத்திற்கான தளபதியாக கிட்டு பணியாற்றிய காலப்பகுதியில் சென்னையிலிருந்து வெளிவரும் ஆங்கில சஞ்சிகையான "புரன்ட்லைன்" இதழுக்கு வழங்கிய செவ்வியிலிருந்து சில பகுதிகள் இவை. இந்தச் செவ்வி 1986 நவம்பர் 15 - 28 ஆம் திகதிய புரண்ட்லைன் சஞ்சிகையில் வெளியிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அவர்களில் பெருந் தொகையானோர் உயர்மட்டத், தாழ்மட்டத் தலைவர்கள் எனக் காண்பீர்கள். இது ஏன் தெரியுமா? எமது அணியினருக்கு தலைமை தாங்கி நாங்களே அவர்களைப் போர்முனைக்கு இட்டுச் செல்கின்றோம். வெறுமனே ஆணையிடுவதோடு அமையாது செருமுகத்திற்கு நாமே படை நடத்தியும் செல்கிறோம்.

ஆகையால், எமது இயக்கத்தில் போட்டா போட்டி இருக்கலாம். அப்படி இருந்தாலும் கூட, சௌகரியமான சீவியத்திற்காக அது இருக்க முடியாது. மரண ஆபத்திற்கு ஓர் அறைகூவலாக மாத்திரமே அது இருக்க முடியும்.

யாழ்ப்பாண வாசிகள் சிலர் என்னிடம் கூறியதைப் பற்றி நான் கிட்டுவிடம் கேட்கிறேன்.

அவர் எப்பொழுதும் அபாயத்தின் மத்தியில் நிற்கிறார்... ஒரு 'பிக்-அப் ட்றக்'கிலிருந்து ஹெலிகப்டர் ஒன்றை நோக்கி அவர் சுட்டதைச் சிலர் கண்டிருக்கிறார்கள். யாழ்ப்பாண டச்சுக் கோட்டையினின்றும் பீரங்கிப் பிரயோகம் நடைபெறும் போதெல்லாம் கிட்டு களத்தில் நிற்கிறார். இதனால் அனாவசியமான ஆபத்து நிலைக்குள் உங்களை நீங்கள் ஆளாக்கி வருகிறீர்கள் அல்லவா?

தோள்களை ஒரு தடவை உயர்த்தி இறக்கியவாறு கிட்டு விடை பகர்கிறார். ''ஏதோவொரு வகையாக இதுவரை நான் பாக்கியசாலியாக இருந்து வந்துள்ளேன். நான் இப்போது உங்களுக்கு சொல்லப் போவது உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் நான் கடைப்பிடித்து வருவது ஓர் இஸ்ரேலிய ஜெனரலின் புத்திமதியைத்தான்''.

நெடு நாட்களுக்கு முன்பு நான் இதனை வாசித்திருக்கிறேன். இந்த மனிதன் போர்க்களத்தின் பின்னணியில் நின்றுகொண்டு கட்டளை பிறப்பித்தது கிடையாது. முன்னணியிலிருந்துதான் அவர் என்றென்றும் ''முன்னே வா'' அல்லது 'எனக்குத் துணை நில்' எனச் சத்தமிடுவார். அவர் பின்னுக்கு நின்றுகொண்டு 'முன்னேறு' எனக் கூறியதே இடையாது.

தமிழ்ஈழ விடுதலைப்போராளிகளின் ஆள்வலுவுக்கும், இலங்கை அரசின் துருப்புகளின் எண்ணிக்கைக்கு மிடையிலான விகிதவேறுபாடுயாது? இதனையிட்டு கிட்டு மனந்திறந்து பேசினார்.

அவர்களிடம், அதிக ஆட்கள், சிறந்த உபகரணங்கள், ஆயுதங்கள், அப்படி, இப்படி என்றெல்லாம் உண்டுதான். ஆனால் எம்மிடம் ஆன்மபலமும், வீரமும் உள்ளன. சாவுக்கு நாம் தயார், அவர்கள் சாக ஆயத்தமானவர்கள் அல்ல. அதனால் வெளியே அவர்கள் புறப்பட்டுவருவதில்லை. ஏன்? எம்மில் கடைசி மனிதன் உயிருடன் இருக்கும்வரை நாம் போர்புரிவோம், அவர்களுக்கு பாரிய இழப்புக்கள் நேரிடும். அவர்கள் அதைநன்குஅறிவார்கள்.

## இந்திய அரசின் கோழைத்தனமான செயலுக்கு வெகுஜன அமைப்புகள் கண்டனம்

இந்திய அரசு எமது தேசியப் பிரச்சினையில் பல தடவைகள் அட்டபட்டமாக தலையிட்டு, தமிழினத்தை ஆத்திரம் கொள்ள வைத்துள்ளது. தற்போதும் கேணல் கிட்டுவும் ஏனைய போராளிகளும் உயிர் துறந்தமைக்கு இந்திய அரசே முழுப் பொறுப்பாளியாகும் என்று தமிழீழ வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டதிட்டங்களுக்கு எதிரானதும், மனித உரிமைகளை மதிக்காமலும் இந்திய அரசு மேற்கொண்ட இக் கோழைத்தனமான செயலுக்கு முழு உலகமும் கண்டனத்தையும் கடும் ஆட்சேபத்தையும் தெரிவிக்க வேண்டும் என்றும் அவ் அறிக்கையில் மேலும்கூறப்பட்டுள்ளது.

கடலில் களப்பலியாகிய வேங்கைகளுக்கு அஞ்சலிசெலு

### வான்வெளியில்வந்தசெய்தி கனவாக மாறாதோ

வான் வெளியில் வந்த செய்தி
கனவாக மாறாதோ

### தன்னுயிர் நீத்த வேங்கைகட்கு கண்ணீர் (பா) மாலை

கிட்டு மாமாவுடன்
சிட்டாகப் பறந்து, சிறகொடிந்த
குட்டிசிறி, வேலன்
ஜீவா, குணசீலன்
மற்றும்;

றொஷான், நாயகன், தூயவன்
நல்லவன், அமுதன்
வங்கக் கடலில் - எழுந்த
தீச் கொழுந்தில் வாடிய வேங்கைகளே!

நீங்கள்!
இந்திய துரோகத்தின் முதல் ஆகுதியா?
இல்லை, இல்லை!
இது அவர்களது துரோகத்தனத்தின் தொடர்ச்சியே!

இந்தியாவின் மீது மக்களின் ஆத்திரம் திரும்பியுள்ளது. இந்தியாவிற்கு எதிரான கோஷங்களை மக்கள் எழுப்பியவாறு ஊர்வலங்களும், ஆர்ப்பாட்டங்களும் செய்துள்ளனர். இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் கொடும்பாவியையும், தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் கொடும்பாவியை பல இடங்களில் எரித்துள்ளனர்.

இவ்வாறாக மக்கள் சோகத்தின் விளம்பிற்குச் செல்லும் அளவிற்கும், அவர்கள் உள்ளத்தில் உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தும் அளவிற்கும் தளபதி கிட்டு மக்களின் மனதைக் கொள்ளை கொண்டிருந்தார். அவர் சுமார் நான்குவருடங்கள் தமிழ் மக்களை விட்டுப் பிரிந்திருந்தார். இருப்பினும் மக்கள் மனங்களை விட்டு அவர் அகலவில்லை.

மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடனும், போராளிகளுடன் சிறிலங்கா இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்கி வீர காவியம் படைத்த தளபதி கிட்டு, போர்முகத்தில் எப்பொழுதும் முன்னணியிலேயே நின்றார். களத்திற்கு கிட்டு வந்து விட்டார் என்ற அறிவிப்பு சிங்களச் சிப்பாய்க்கு கிலியையும், விடுதலைப் புலிகளுக்கு ஆக்ரோஷத்தையும், துணிவையும் வழங்கும் அருமருந்தாகியது. தமிழ் மக்களுக்கே வெற்றி உறுதியென்றாகியது.

குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அன்பு கொண்டு பழகிய தளபதி கிட்டு சகலரதுமனங்களிலும்என்றும், நிறைந்திருந்தார். குழந்தைகளும்,இளைஞர்களும் அன்புடன் 'கிட்டு மாமா' என அழைக்கப்பட்ட தளபதி கிட்டு, எப்பொழுதும் மக்களுடன் ஒன்றியே இருந்து. அவரைத் தெரியாதவர்களே யாழ். குடா நாட்டில் இருக்க முடியாது என்ற அளவிற்கு அவர் மக்களுடன் கலந்திருந்தார், நிறைந்திருந்தார்.

இவ்வாறான தளபதி கிட்டுவின் வீரச்சாவு தமிழ் மக்களை உலுப்பியமையில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. இதேவேளை கிட்டுவின் மரணம். இந்தியாவின் அயோக்கியத்தனத்தையும், அராஜகத்தையும் மீண்டும் ஒரு முறை தமிழ் மக்களுக்கு நினைவூட்டியுள்ளது.

இந்தியா நயவஞ்சகமாகக் கொலை செய்த தியாகி திலீபன்,புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட பன்னிரண்டு போராளிகள் லெப்.கேணல் ஜொனி, தற்பொழுது மரணமான கேணல் கிட்டு உட்பட 10 போராளிகளின் மரணம் என்பவற்றால் இந்தியாவின் கொலைப்பட்டியலே நீண்டு கொண்டுபோகின்றது.

ஆனால், இந்திய அரசாங்கத்தின் துரோகத்தனங்களும் சதி நடவடிக்கைகளும் இந்தியாவிற்கு ஒரு போதும் நன்மை அளிக்காது. விரோதத்தையே தமிழீழமக்களுடன் வளர்க்கும். தமிழ் மக்கள் இந்தியாவிற்கு எதிராககிளர்ந்தெழுந்து இங்கு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றமைஇதனையே காட்டுகின்றது. அத்தோடு, நயவஞ்சகக்கொலைகள் மூலம்தமிழீழப் போராட்டத்தை நசுக்கிவிட முடியாது என்பதையும்உணர்த்துவதாகவும்உள்ளது.

இந்திய அரசின்

# கோழைத்தனமான செயலுக்கு வெகுஜன அமைப்புகள் கண்டனம்

இந்திய அரசு எமது தேசியப் பிரச்சினையில் பல தடவைகள் அப்பட்டமாக தலையிட்டு, தமிழினத்தை ஆத்திரம் கொள்ள வைத்துள்ளது. தற்போதும் கேணல் கிட்டுவும் ஏனைய போராளிகளும் உயிர் துறந்தமைக்கு இந்திய அரசே முழுப் பொறுப்பாளியாகும் என்று தமிழீழ வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டதிட்டங்களுக்கு எதிரானதும், மனித உரிமைகளை மதிக்காமலும் இந்திய அரசு மேற்கொண்ட இக் கோழைத்தனமான செயலுக்கு முழு உலகமும் கண்டனத்தையும் கடும் ஆட்சேபத்தையும் தெரிவிக்க வேண்டும் என்றும் அவ் அறிக்கையில் மேலும்கூறப்பட்டுள்ளது.

கடலில் களப்பலியாகிய வேங்கைகளுக்கு அஞ்சலிசெலுத்துவதுடன் இந்திய அரசின் கோழைத்தனமான இச்செயலை உலக அரங்கில் அம்பலப்படுத்த அனைத்து தமிழீழ மக்களும் அணிதிரள வேண்டும் என்று வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் மேலும் கோரப்பட்டுள்ளது.

## வான்வெளியில்வந்தசெய்தி கனவாக மாறாதோ

வான் வெளியில் வந்த செய்தி
கனவாக மாறாதோ
நீ வீழ்ந்தாய் என்ற செய்தி
பொய்யாகப் போகாதோ
தமிழீழத் தாயவளின் மகனே
நீ வந்து சேராயோ
எங்கள் குலம் காத்த பெருமகனே
மனம் மகிழ வருவாயோ

கிட்டு மாமா பெயரைச் சொன்னால்
பயமின்றி குழந்தைகள் தூங்கும்
கிட்டு மாமா பெயரைக் கேட்டால்
துட்ட சிங்களப்படை பயந்து ஓடும்
கிட்டு மாமா கிட்ட நின்றால்
கூனல் கிழவரும் நிமிர்ந் தெழுவார்
கிட்டு மாமா களத்தில் நின்றால்
தோல்வி எது என்று அறியோம்

தனிமரம் தோப்பாவதில்லை என்று
கதை படித்தோம்
தனி மனிதன் பெரும்படையாய் நின்ற
கதை அறிவோம்
கிட்டு மாமா அருகில் நின்றால்
பெரும் படை எமக் கெதற்கு
கிட்டு மாமா நீ இல்லை என்று
சொல்ல மனமில்லை எனக்கு

கிட்டு மாமா படைக்கலமது
கோட்டையிலே முழங்கும்
கிட்டு மாமா குறியில் பட்டு
சிங்களப் படை சாகும்
கிட்டு மாமா குரல் தொலை தொடர்பில்
இடியெனவே முழங்கும்
தொண்டமானாற்றில் வந்த படை
குரல் கேட்டு ஓடும்

87ல் கால் இழந்து மே நாளில்
நல்லூரில் நீ எழுந்து வந்தாய்
கடலெனவே திரண்ட மக்கள்
கந்தனையா தொழுதார்
விம்மி விம்மி அழுது அழுது
உந்தனையே தொழுதார்
காவல் வீரன் நீ இருக்க
பயமில்லையே என்றழுதார்

சிறிய படைக் கலன்கள் கொண்டு
எம் மண்ணைக் காத்தாய்
பெரும் படைக் கலன்கள் நிறைந்திருக்கே
நீ எங்கே போனாய்
நீ நடந்த தெருவெல்லாம் சோக
இசை கேளாய்
எம் தாயகத்தின் பெரும் வீரா
வந்து எம்மைப் பாராய்

-யோ. யோகி

சிகிச்சை அளிக்க

## நிபந்தனை

பொலிஸாரிடம் அனுமதி பெற்ற நோயாளர்களிமட்டுமே அனுராதபுரம்வைத்தியசாலையில் சிகிச்சைபெற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வார்ட்டில் சிகிச்சைபெற்றுக் கொண்டிருக்கும் நோயாளிகளைப் பார்க்கச் செல்வோரும் அனுமதி அட்டை பெறவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம் அரசாங்க வைத்தியசாலையின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வைத்தியசாலையைச் சுற்றி இராணுவமும் பொலிசும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வைத்தியசாலை வாசலில் உள்ள பொலிஸாரிடம் அனுமதி அட்டை பெற்று வைத்தியசாலை கட்டடத்திற்குள் நுழைவோர் திடீர் திடீர் என்று பொலிஸாரினால்சோதனைக்குட்படுத்தப்படுகின்றனர்.

### பொதுக்கூட்டம்

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்ட ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தன்னுயிர் நீத்த வேங்கைகட்கு கண்ணீர் (பா) மாலை

கிட்டு மாமாவுடன்
சிட்டாகப் பறந்து, சிறகொடிந்த
குட்டிசிறி, வேலன்
ஜீவா, குணசீலன்
மற்றும்;

றொஷான், நாயகன், தூயவன்
நல்லவன், அமுதன்
வங்கக் கடலில் - எழுந்த
தீக் கொழுந்தில் வாடிய வேங்கைகளே!

நீங்கள்!
இந்திய துரோகத்தின் முதல் ஆகுதியா?
இல்லை, இல்லை!
இது அவர்களது துரோகத்தனத்தின் தொடர்ச்சியே!

இதனால்!
எரிமலையாகி
எழும்பும் ஆயிரம் ஆயிரம்
வீர வேங்கைகள் - இத்
துரோகிகளுக்கே சமாதி படைப்பர்!

புனர்வாழ்வுப்பகுதி,
செயலகம்.

## திங்கள் ஒளி மறைந்ததுவோ?

அடிவானம் பிளந்து
அனலொன்றைக் கக்கியதோ?
இடியொன்று முழங்கி
எம்செவியை உடைத்ததுவோ?
விடிவுக்காய் பாடிவந்த
வரிக்குயில் வீழ்ந்ததுவோ?
செடிமீது பூத்து நின்ற
செவ்வந்தி கருகியதோ?

கொட்டும் கருந்தேளின்
கூட்டமதின் முன்னே
சிட்டொன்றின் சிறகு
வெட்டுண்டு போனதுவோ?
வட்டநிலா வான்பரப்பில்
வனப்பிழந்து மறைந்ததுவோ?
'கிட்டென்னும்' பெருநெருப்பை
கடல் கொண்டு சென்றதுவோ?

குடாநாட்டை எம்கையில்
கொண்டுவந்த தளபதியை
விடாமல் எதிரிபடை
வழிமறித்துத் துரத்தியதோ?
தடாகத்துத் தாமரையை...
தந்திரநரி சிதைத்ததுவோ?
"கடாரத்தைக்" கடந்துவந்த
காவியம் மாண்டதுவோ?

சிங்களப் படையை
சிதைத்தே... போர்க்களத்தில்
மங்களம் பாடிய...
மாணிக்கம் மறைந்ததுவோ?
வெங்களம் ஒன்றுக்கு
விடியலாய் இருந்தபெரும்
திங்களின் ஒளியின்றெம்
தேசத்தில் மறைந்ததுவோ?

— கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

ஈழநாதம்

# இந்திய மத்திய அரசின் ஆதிக்க மிகைவாத செயல்

## யாழ். பல்கலை ஆசிரியர் கண்டனம்

சர்வதேச கடற்பரப்பின் விதிமுறைகளை அத்துமீறி அலட்சியம் செய்து, ஈழத்தமிழரின் உயிர்களையும்உடைமைகளையும் கொடூரமான முறையில் அழித்து நாசமாக்குவதற்குக் காரணியாக இருந்த இந்திய அரசின் ஆதிக்க மிகைவாதச் செயல் ஜனநாயக உலகில் மிகவும் கண்டனத்திற்கு உரிய ஒன்றாகும்.

இவ்வாறு யாழ் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும்;

எண்ணுக்கணக்கில் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு எனத் தன்னை இனம் காட்டிக் கொள்ளும் இந்தியா, அனைத்து அடிப்படை மனித உரிமைகளையும் இழந்து பல்வேறு ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாகி நலிந்துள்ள ஈழத்தமிழினத்தின் உரிமைப் போராட்டத்தை நசுக்க முனையும் துரோகச் செயல்கள் அனைத்தும், உலகனைத்தும் வாழும் தமிழ் மக்களினால் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

ஐரோப்பிய அரசுகளின் அனுசரணையுடன் சமாதானத் திட்டம் ஒன்றினை முன்வைக்க முயன்றவர்களின் பயணத்தையே பாதிக்கடலில் முற்றுப் பெறாமல் செய்த இந்திய அரசு உலக நாடுகளின் முன் சமாதானம் பற்றியும் சமரசம் பற்றியும் பேசுவதற்கான அருகதையையே இழந்து நிற்கின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### எறிகணை வீச்சு

பலாலியிலிருந்து தொண்டமனாறு பகுதியை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன் தினம் காலை 6. 30 மணியளவில் ஆட்லறி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். எனினும் சேத விபரங்கள் பற்றி எதுவும் தெரியவில்லை. நேற்று காலை 9. 00 மணியளவில் தொண்டமனாறு பகுதியில் திடீரென சத்தமின்றி புகைமண்டலம் ஏற்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (யோ)

# முல்லை மாவட்டத்தில் மாபெரும் வெகுஜன பேரணி

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று வெகுஜன ஒன்றியமும், மாணவர்களும் ஒன்றிணைந்து மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடாத்தினர்

கிளாலி கடற்பரப்பில் படுகொலை செய்யப்பட்ட கல்வி அதிகாரி, ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்களுக்கும் அனுதாபம் தெரிவிக்கும் முகமாகவும் சிறிலங்கா அரசால் சீருடை வழங்கப்படாமைக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும் இப்பேரணி நடாத்தப்பட்டது.

கல்விகற்பதற்கு அத்தியாவசியப் பொருள்களை அனுப்ப வழிவிட வேண்டுமென்றும் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் கோரி முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ஊடாக சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கு மகஜர் ஒன்று எடுத்துச் செல்லப்பட்டது. முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், புதக்குடியிருப்பு, நெடுங்கேணி, உதவி அரச அதிபர்கள் பிரிவு மட்டத்தில் இப்பேரணி நடாத்தப்பட்டது.

இப்பேரணியின் இறுதியில் மகஜர்கள் யாவும் உதவி அரச அதிபர்கள் ஊடாக அரச அதிபருக்கும், ஜனாதிபதிக்கும் அனுப்பி வைப்பதற்காக ஒப்படைக்கப்பட்டது.

இம்திய பிரதமா

டன இந்த ஊர்வலங்களில் நூாறுக்கணக்கான மக்கள் பங்குபற்றினர். இந்திய வஞ்சகச் செயலுக்கு கண்டனம் தெரிவித்து மக்கள் கோஷமிட்டனர். பறையொலி வானைப் பிளந்தது. ஒப்பாரி செய்து ஓலமிடும் ஒலி உரத்துக் கேட்டது. இவ்வாறாக நேற்றைய கொடும்பாவி ஊர்வலம் பல பகுதிகளிலும் நடைபெற்றது. (ம)

## பாதுகாப்பு அதிகரிப்பாம்

(கொழும்பு)

கொழும்பில் இந்திய தூதுவராலயத்திற்கும் இந்திய அதிகாரிகளின் வாசஸ்தலங்களுக்கும் கூடிய பாதுகாப்பு வழங்குப்படி இந்திய அரசு சிறிலங்கா அரசைக் கேட்டுள்ளது.

இதனையடுத்து கொழும்பில் இந்திய தூதுவராலய பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## துறைமுகத்தை திருத்த பொருள் வழங்க மறுப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்தை சீர்செய்தல் மற்றும் அதன் முழுமையான செயற்பாட்டிற்கு தேவையான அத்தியாவசியப்பொருள்களை கொழும்பில் இருந்து இங்கு எடுத்துவர கூட்டுப்படைகள் தலைமையகம் அனுமதியை மறுத்து வருவதாக தெரிய வருகின்றது.

இருந்தும் யாழ் செயலக அதிகாரிகள் இவற்றை எடுத்து வர முயற்சி மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. இதில் முக்கியமாக துறைமுகத்தை திருத்துவதற்கான சீமெந்து, இழுவைப் படகுகளுக்கான எஞ்சின் ஒயில், இழுவைக் கயிறு மற்றும பழுதடைந்த பாஜ்ஜை திருத்துவதற்கான மசகு என்பவற்றையே எடுத்துவர கூட்டுப்படை தலைமையகம் அனுமதியை மறுத்து வருகின்றது.

இது சம்பந்தமாக யாழ். செயலக அதிகாரிகள் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடம் பல முறை முறையிட்டிருந்தும் கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் தொடர்ச்சியாக இப் பொருள்களைஎடுத்துவர தடைவிதித்து வருவதாக தெரியவருகின்றது இருந்தும் தற்பொழுது கொழும்பு சென்றுள்ள யாழ். அரச அதிபர் மேற்படி துறைமுக நிலைமையை சீர்செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

திருவில்

உருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி விடுதலைப் புலிகளின் இராணுவ அணிவகுப்புடன் முன்னே செல்ல ஊர்வலம் நெல்லியடி சந்தியில் இருந்து பி. ப 2 மணிக்கு ஆரம்பமாகி வதிரிச் சந்தி உடுப்பிட்டி ஊடாக இந்தியாவின் கடந்த கால துரோகத்தனத்தை நினைவு கூரும் திருவிலை சென்றடையும். இதனைத் தொடர்ந்து இவ் வீரர்களின் நினைவுக் கல் நடுகை இடம் பெறும். பி. ப. 5-30 மணியளவில் கண்டனக் கூட்டம் ஆரம்பமாகும்.

''எம் பாசமிகு மக்களே! எம் தேச விடுதலைக்கான உரிமைப் போராட்டத்தை தன் சுயநல நோக்கத்திற்காக நசுக்க முயலும் இந்தியாவின் கபடத்தனத்தை உலகிற்கு எடுத்துக்காட்ட அணிதிரளுங்கள் திரண்டு வாருங்கள்'' என தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் துறை செயலகம் அழைப்பு விடுத்துள்ளது.

கிட்டுவின்

தலைவர்கள் தமிழக காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவரும் தமிழக சட்டப்பேரவையின் முன்னாள் உறுப்பினரு

தமிழீழம்

ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் தளபதி கிட்டு உட்பட பத்துப் போராளிகளதும் உருவப்படங்கள் அலங்கரிக்கப்

## புனித செபஸ்தியார் திருவிழா

குருநகர் புனிதசெபஸ்தியார் ஆலய வருடாந்த உற்சவம் 20-01-93 புதன்கிழமை நடைபெற உள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 30 மணிக்கு திருப்பலியும் நற்கருணை சுற்றுப் பிரகாரமும் நடைபெறும். திருநாள் பூசைப்பலி 20 - 01 - 93 புதன் கிழமை காலை 6 45 மணிக்கு ஒப்பு கொடுக்கப்படும். [17]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

18-01-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8033

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

41-9175, 28 3029, 24-5679, 27-9090, 27-0089, 26-1221, 26-3518, 42-1464, 28-3429, 27-9404, 42-0488, 42-1178, 24-6489, 27-6524, 28-4367

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

இல்லை

## மரண அறிவித்தல்

## மூத்ததம்பி கந்தையா

மட்டுவில் தெற்கைச்சேர்ந்த மூத்ததம்பி கந்தையா (18-1-93) அன்று காலமாகிவிட்டார். அன்னார் திருமதி வள்ளிப்பிள்ளையின் கணவரும், திரு. பத்மநாதன் (ஆசிரியர்), இராசரத்தினம் (நவாலி), குணபாக்கியவதி (உசன), தனபாக்கியவதி (ஆசிரியை), பத்மாவதி (லண்டன்) ஆகியோரின் தகப்பனாரும் தேவபாலன் (இந்தியா) பேரனும் கார்த்திகேசு (உசன்), சிவறஞ்சன் (லண்டன்), கனகாம்பிகை, சிவயோகமலர் ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று (19-1-93) செவ்வாய் பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும்.


தகவல்:

பத்மநாதன் ஆசிரியர்

(4040)


வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்

## கண்ணீர் அஞ்சலி



தமிழீழ விடுதலைப் புலிகளின்


# புல்மோட்டை சமரில் வீரச்சாவு அடைந்தோர்







# கண்ணீர் அஞ்சலி



தமிழீழ விடுதலைப் புலிகளின்

## மூத்த தளபதி

## கேணல் கிட்டு

அவர்களுக்கும் சக ஒன்பது வீரவேங்கைகளுக்கும் தமது கண்ணீர் அஞ்சலியை செலுத்திக்கொள்கின்றது

தமிழீழ மக்களே இந்தியா மீண்டும் மீண்டும துரோகம் இழைத்துவிட்டது. இந்தியாவை இனம் காணுங்கள்.

இவர்களது தியாகம் எமது தாயகமண் மீட்பிற்கு உந்துசக்தியாக அமையட்டும்.

[4033]

# வீ ர வ ண க் க ம்

### இந்திய அரசின் நாசகாரச் சதியால் வீரச்சாவு எய்திய

முன்னாள் யாழ்.மாவட்டத் தளபதியும் எமது மூத்த தளபதியுமான

## கேணல் கிட்டு

### [சதாசிவம் கிருஷ்ணகுமார்]

### அவர்களுக்கும் ஏனைய 9 போராளிகளுக்கும் எமது வீர அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்

பாசத்தோடு ஈழமக்கள் நெஞ்சையாளுவாய் - பிர
பாகரனின் தப பியாகி என்றும் வாழுவாய்
ஆசையோடு தேசம் காண வந்த வீரனே! - கிட்டு
அண்ணனென்ற பேரெடுத்த எங்கள் தேவனே!

**இந்திய அரசே! சர்வதேசக் கடற் ரப்பு என்ன உன் சொத்தா?**

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
பண்டத்தரிப்புக் கோட்டம்

[சி-5820]

இபபத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா விதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ,ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

யளவில் கண்டனக் கூட்டம் ஆரம்பமாகும்.

''எம் பாசமிகு மக்களே! எம் தேச விடுதலைக்கான உரிமைப் போராட்டத்தை தன் சுயநல நோக்கத்திற்காக நசுக்க முயலும் இந்தியாவின் கபடத்தனத்தை உலகிற்கு எடுத்துக்காட்ட அணிதிரளுங்கள் திரண்டு வாருங்கள்'' என தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் துறை செயலகம் அழைப்பு விடுத்துள்ளது.

### கிட்டுவின்

தலைவர்கள் தமிழக காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவரும் தமிழக சட்டப்பேரவையின் முன்னாள் உறுப்பினருமான ப நெடுமாறன், தமிழ் நாடு சட்ட மேலவை முன்னாள் துணைத் தலைவ புலமைப் பித்தன், மற்றும் தமிழ் நாடு விடுதலைக் குயில்கள் அமைப்பின் தலைவர் பேராசிரியர் சுப வீரபாண்டியன் ஆகியோர் உட்பட பலர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய மத்திய அரசின் சதிச் செயலுக்கெனக் கண்டனமும் ஆடசேபமும் தெரிவிக்கும் போராட்டங்களிற்கான ஏற்பாடுகளில் இவர்கள் ஈடுபட்டிருந்த போதே கைது செய்யப்பட்டதாக தமிழ்நடு காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மதுவை மறுத்து வருகின்றது.

இது சம்பந்தமாக யாழ். செயலக அதிகாரிகள் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடம் பல முறை முறையிட்டிருந்தும் கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் தொடர்ச்சியாக இப் பொருள்களை எடுத்துவர தடைவிதித்து வருவதாக தெரியவருகின்றது இருந்தும் தற்பொழுது கொழும்பு சென்றுள்ள யாழ். அரச அதிபர் மேற்படி துறைமுக நிலைமையை சீர்செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### தமிழீழம்

ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் தளபதி கிட்டு உட்பட பத்துப் போராளிகளதும் உருவப்படங்கள் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. இப்படங்களுக்கு முன்னால் மலர்கள் தூவி அணையாத தீபங்கள் ஏற்றப்பட்டு மக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

பிரதான வீதிகள், கேந்திர நிலையங்கள் போன்றவற்றில் ஒலி பெருக்கிகள் இணைக்கப்பட்டு முகாரி ராகத்துடனான சோக இசை முழங்கிக்கொண்டிருக்கிறது. இடையிடையே தளபதி கிட்டுவின் பேச்சுக்களும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. அத்துடன் குடாநாட்டில் உள்ள பல்வேறு பொது அமைப்புக்கள், நிறுவனங்கள், போராளிகளது வீரச்சாவுக்கு அஞ்சலி செலுத்தியும், இந்திய அரசின் வஞ்சகச் செயலுக்கு கண்டனம் தெரிவித்தும் கண்டன அறிக்கைகளையும், சுவரொட்டிகளையும், துண்டுப்பிரசுரங்களையும் வெளியிட்டுள்ளன.

(க)


### இந்திய

கான மக்கள் கலந்து கொண்டனர் இன்றும் நாளையும் இந்திய பிரதமர் நரசிம்மராவ் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவினதும் கொடும்பாவிகள் கட்டி எரிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### கிட்டுவந்த

சேர்க்கப்பட்டு உள்ளனர். இவர்களுடன் ஒரு சடலமும் எடுத்து வரப்பட்டதாகவும் அது அசோக்பாபு என்பவருடையது என இனம் காணப்பட்டிருப்பதாகவும் விசாகபட்டினம் பொலிசார் கூறியுள்ளனர். விசாகபட்டினத்திற்கு அழைத்து வரப்பட்டிருக்கும் ஏனையவர்களின் பெயர்கள் வருமாறு: ஜெயச்சந்திரன், கே. நாயகன், எஸ். சிவராஜன், எஸ். இந்திரலிங்கம், ஏ. சுபாஸ்சந்திரா, பாலகிருஷ்ணன், மோகன் என்றும் விசாகபட்டினம் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

# புல்மோட்டை சமரில் வீரச்சாவு அடைந்தோர்




மேஜர் அருணமொழி (கௌதமன்)
(திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர்)



கப்டன் செல்வக்குமரன் (சுகுமார்)



கப்டன் வினைக்கொடியோன் (வர்ணன்)



லெப. கார்வண்ணன் (ஒஸ்னஸ்)



லெப், காண்டீபன்



வீரவேங்கை பிரியன்



வரவேங்கை! இளவேனில் (துஷான்)



வீரவேங்கை இளவரசு (ரவிக்காந்)